DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 114 /2022

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜபாண்டியன் | Father's/Husband's Name : சுப்பையா நாயுடு | |
| Village | : மதுரை | Taluk | : மதுரை |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 72 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.11.2025

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியம் என்று கேட்டால் காமாட்சி செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்து. மேற்படி காமாட்சி செட்டியாரின் மனைவி பெயர் சுப்பம்மாள் என்றால் சரிதான். மேற்படியார்களுக்கு எனது அம்மா வெங்கட்டம்மாள், சுப்பையா காவேரி அம்மாள் ஆகியோர் மக்கள் ஆவர்கள். எனது வழக்குரையில் தாவா சொத்து ஆதியில் காமாட்சி செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி காமாட்சி செட்டியார் தனது சொத்துக்களை பொறுத்து கடந்த 22.11.1943 ஆம் தேதி ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் செட்டில்மெண்ட் ஆவணம் என்று எழுதி அது உயில் ஆவணம் போல் தான் இருந்தது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது அம்மா மற்றும் அவரது உடன் பிறந்தவர்கள் மைனர்களாக இருந்த போது அவர்களது தாயாரான சுப்பம்மாவை கார்டியனாக காண்பித்து எழுதப்பட்டது என்றால் சரிதான்.

2) மேற்படி ஆவணத்தில் தாவா சொத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமன்நாராயணமூர்த்தி சுவாமிக்கு பூஜை புனஸ்காரங்கள் வழக்கமாக செய்யப்படவேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் புரட்டாசி கடை சி சனிக்கிமையில் பூஜை செய்யப்படவேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. மேற்படி பூஜையை சுப்பம்மாளுக்கு பின்பு அவரது மக்களும் அவர்களுக்கு பிறகு புத்திர பௌத்திர பாரம்பரியமாய் செய்ய வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. காமாட்சி செட்டியாரின் ஆண் வாரிசு திருமணமாகாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். காவேரியம்மாளும், வெங்கட்டம்மாளும் சேர்ந்து பூஜை செய்து வந்தார்கள் என்று

சொன்னால் அவர்கள் மதுரைக்கு புலம் பெயர்ந்து சென்றுவிட்டதால் பூஜைகள் செய்யவில்லை. சுப்பம்மாள் இறந்த பிறகு எனது அம்மா வெங்கட்டம்மாள் எங்கள் வீட்டில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமன் நாராயணமூர்த்திசாமிக்கு பூஜைகள் செய்து அன்னதானம் கொடுத்து வந்தார்கள் என்றால் சரிதான், நானும் எனது அம்மாவும் சேர்ந்து மதுரை கூடல் அழகர் பெருமாள் கோவிலில் தான் செய்து வந்தோம்.

3) நான் சொல்வது போல் நானும் எனது அம்மாவும் மட்டும் பூஜை செய்யவில்லை என்றாலும் எனது சகோதரர்கள் துரைப்பாண்டி, ஹரிகிருஷ்ணன் ஆகியோரும் சேர்ந்து பூஜை செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் மட்டும் தான் செய்து வந்தோம். கடந்த 22.11.1943ம் தேதி செட்டில்மெண்ட் ஆவணப்படி சந்ததி பரம்பரையாய் வழக்கு சொத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமன் நாராயணமூர்த்திசாமியை வழிபடுவதற்கும், அன்னதானம் வழங்குவதற்கும் வெங்கட்டம்மாள் வாரிசுகளுக்கு உரிமை உள்ளது என்றால் யாரும் முன்வரவில்லை, ஆனால் அவர்களுக்கும் உரிமை உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணப்படி தாவா சொத்திலிருந்து வந்த வாடகையை எனது அம்மமா வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு அந்த பணத்தில் தான் பூஜை காரியங்கள் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4) எனது அம்மா 29.04.2021ம் தேதி இறந்துவிட்டார். அவர் இறந்த பிறகு பூஜை காரியங்கள் செய்ததற்கு கணக்கு எதுவும் வைக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு என் பெயரிலும் எனது அம்மா வெங்கட்டம்மாள் பெயரிலும் வீட்டு வரி இரசீது உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் வீட்டு வரி இரசீது எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவர் பெயரிலும் சேர்த்து செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல, என் பெயரில் உயில் எழுதி வைத்துள்ளார்கள். வா.சா.ஆ.6 ஆவணம் வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு பிரதிவாதி பதிலறிவிப்பு அனுப்பினார் என்றால் அனுப்பவில்லை. எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான்.

5) வழக்கு சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் உயிலை உற்பத்தி செய்திருப்பதாக அந்த வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல, அனுப்பியிருக்கிறேன். அந்த பதில் அறிவிப்பில் உயில் மூலம் தாவா சொத்தில் எனக்கு பாத்தியம் இருக்கிறது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.2 உயில் சாசனத்தில் 22.11.1943 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட்டில் சந்ததி பரம்பரையாக பூஜை செய்ய வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட்டின்படி காமாட்சி செட்டியார் வாரிசுகள் அனைவருக்கும் பூஜை செய்ய உரிமை உள்ளது என்பதால் எனது பெயரில் மட்டும் எழுதிகொடுக்கப்பட்ட உயில் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

6) எனது அம்மா என்ன படித்திருக்கிறார் என்றால் கையெழுத்து போடுவார், கொஞ்சம் படிக்கத் தெரியும். வா.சா.ஆ.2 உயில் ஆவணம் எழுதி பதிவு செய்யும் போது நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். பத்திர எழுத்தரிடம் வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் உள்ள விபரங்களை எனது தாயோரும் நானும் தான் சொன்னோம். வா.சா.ஆ.2 உயில் ஆவணத்தில் எனது மனைவி 1வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். 2 வது சாட்சியாக என்னுடன் வாடகை காருக்காக வந்த டிரைவர் கையெழுத்து செய்தார் என்றால் சரிதான். வாடகைக்கு கார் கொண்டு வந்தது என்றால் நான் தான். வா.சா.ஆ.2 உயில் சாசனத்தை எழுதி வைக்க எனது தாயாருக்கு உரிமை இல்லை என்று சொன்னாலும், எனது அறிவுரையின் பெயரில் தான் மேற்படி உயில் ஆவணம் எழுதி வைக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னாலும் சரியல்ல. மேற்படி உயிலின் அடிப்படையில் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

7) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனது சகோதரர் துரை பாண்டியனிடம் தாவா சொத்தின் சாவியை பிரதிவாதி கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல, தேதி மாற்றி மாற்றி சொல்லப்பட்டுள்ளது. பிரதிவாதி தாவா சொத்தை ஒப்படைத்த பிறகு அதில் மாறாமத்து பணிகளை செய்து எனது சகோதரர் துரைப்பாண்டியன் தான் அனுபவத்தில் வைத்திருக்கிறார் என்பதால் பிரதிவாதிக்கு எதிராக சுவாதீனம் மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்க கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 06.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN

Digitally signed by E SUGANTHAN
Date: 2025.11.06 15:51:48 +0530

District Munsif,
Aundipatti.